அக்கழகம் வேண்டிய அலுவலர்களை நியமித்து விவரங்களைத் தயாரிப்பதற்கு முயற்சிகள் எடுத்து வருகிறது.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, சிறு தொழில் துவக்க வேண்டுமென்று பலர் விரும்புகிற நேரத்தில் அவர்களுக்குத் தக்க ஆலோசனைகளை சொல்லித் தருவதற்கும், தொழில் துறையில் அனுபவமும் பயிற்சியும் தருவதற்கும் ஏதாவது புதிய அமைப்பு முறை ஏற்படுத்த அரசு முன்வருமா? என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மகாராஷ்டிரத்தில் இப்படிப்பட்ட முயற்சி எடுக்கப்பட்டு இருக்கிறது. குஜராத் மாநிலத்திலே இப்படிப்பட்ட முயற்சி எடுத்து இருக்கிறார்கள். இதைப் பின்பற்றி நம்முடைய மாநிலத்திலே அந்த முயற்சி எடுக்கப்பட வேண்டுமென்ற முறையில் தொழிலைத் தொடங்கு பவர்கள் என்னிடத்தில் கேட்டு இருக்கிறார்கள். அதற்குத் தேவையான தொழில் அனுபவம் எங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று கேட்டார்கள். தொழிலைப் பற்றி ஆராய்ச்சிசெய்து ஒரு 'பீசிபிள் ரிபோர்ட்' அது பொது வாக எப்படி ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று சொல்வது. சிறு தொழில் வாரியத்தில் இப்படி 'பீசிபிள் ரிபோர்ட்' கொடுப்பதற்கான பணிகளை அனுபவம் மிக்கவர்கள் செய்துகொண்டு இருக்கிறார்கள். டெக்னிகல்-நோ-ஹௌ யோசனைகள் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். இதைக் கண்டித்து திரு. மார்டின் பேசினர் என்பதுதான் எனக்கு வருத்தமாக இருக்கிறது.

புதுத்தொழில்கள் தொடங்குவதில் காலதாமதம்

*326 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதிய தொழில்களைத் தொடங்க லைசென்ஸ் கிடைப்பதில் உள்ள கால தாமதத்தைத் தவிர்க்க அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: முடிவு எடுக்கப்படாமல் மத்திய அரசிடம் உள்ள நேர்வுகள் குறித்து விரைவில் நடவடிக்கை எடுக்குமாறு வேண்டி மாநில அரசு இந்திய அரசுடன் கடிதப் போக்குவரத்தை மேற்கொண் டுள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, புதிய தொழிற்சாலைகளைத் தொடங்க லைசென்ஸ் கிடைப்பதற்கு உள்ள காலதாமதத்தைத் தவிர்க்க, ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தை நிர்ணயித்து, அதற்குள் அனுமதி வழங்குவது என்பதுபற்றி அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நம்முடைய மாநிலத்தில் தொழில் வளர்ச்சி ஆலோசனைக் குழு அண்மையில் கூடியபொழுது, தொழில் அதிபர் களெல்லாம் தொழில் முயற்சிக்கு அனுமதி வாங்குவதிலே தடைகள் இருப் பதினால் மிகவும் பாதிக்கக்கூடிய நிலை இருக்கிறது என்று சொன்னார்கள். அதைப் பரிசிலிக்கத் தனிக் குழு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்தக் குழு அனுமதி பெறுவதிலே என்னென்ன காரணங்களினால் கால தாமதம் ஏற்படுகிறது என்பதைப்பற்றிப் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அதிலும்கூட, ஐ.டி.ஆர். ஆக்ட் மத்திய அரசின் சட்டத்தின்கீழ் அனுமதி கொடுக்கிற காரணத்தினால், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த அளவுக்குக்

கடிதம் எழுதுவது, நேரடியாக அங்குள்ள அமைச்சர்களோடு கலந்து பேசுவது இப்படித்தான் நாங்கள் வற்புறுத்திக்கொண்டு வருகிறோம். உண்மையான காலதாமதத்தைப் போக்க வேண்டும் என்ற நல்ல உணர்ச்சி மத்திய அரசுக்கு விரைவிலே ஏற்படும் என்று நம்புகிறேன்.

தொழில் வளர்ச்சிக்கென தனி நில ஆர்ஜிதச் சட்டம்

* 327 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் தொழில் வளர்ச்சியைத் தீவிரப்படுத்தும் பொருட்டு 'தனி நில ஆர்ஜிதச் சட்டம்' இயற்றும் செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஆம். தமிழகத்தில் தொழில் வளர்ச்சிக்காக, "மராட்டிய தொழில் வளர்ச்சிச் சட்டம், 1961" அடிப்படையில் நில ஆர்ஜிதம் செய்வதற்கான சட்டம்பற்றிய ஒரு செயற்குறிப்புப் பரிசீலனையில் உள்ளது.

திரு. சு. துரைசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இது எப்பொழுது நிறைவேறும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: பரிசிலனை முடிந்ததற்குப் பின்னாலே.

திரு. கே. பி. எஸ். மணி: தற்காலிகமாகக் கிராமாந்திரங்களில் சிறு கைத் தொழில்களை ஆரம்பிக்கின்றவர்களுக்குப் பஞ்சாயத்து போர்டு, பஞ்சாயத்து யூனியன்களுக்கு உள்ள சிறிய இடங்களை ஆர்ஜிதம் செய்துகொள்ள யூனியன் அல்லது டி.டி.சி-க்கு அனுமதி கொடுக்குமா அரசாங்கம்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நில ஆர்ஜிதச் சட்டத்தின்கீழ் இப்பொழுது செய்து வருகிறோம். கடைசியாக இதை இப்பொழுது ரெவின்யூத் துறை நிறைவேற்றி வருகிறது. புதிய சட்டப்படி தொழில் வளர்ச்சிக்கு என்று தனியாக ஒரு நடைமுறை, ப்ரொஸீஜர், பின்பற்றினால் எளிதான முறையில் தாமதமின்றி உடனடியாக நிலங்கள் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்குமா என்பதுபற்றி இந்தச் சட்டத்தில் ஆராய்ச்சி செய்கிறோம். ஒவ்வொரு மாவட்டத்திலும் கிராமங்கள்தோறும் இதைச் செய்வதற்கு என்ன முறைகளைப் பின்பற்றலாம் என்பதைச் சட்டத்தை உருவாக்கும்பொழுது ஆலோசித்து வருகிறோம்.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன்: இந்த நில ஆர்ஜிதச் சட்டம் என்றால் என்ன? அதற்கு விளக்கம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சட்டம் வரும்பொழுது விளக்கமாகப் பேசலாம்.

Driving Schools

* 328 Q.—Thiru T. MARTIN: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal pending before the Government to start driving schools by the traffic police in Tamil Nadu; and